# தமிழ்நாட்டில் நாளை தேர்தல்; 79 தொகுதிகளில் வாக்களிப்பு

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9 இதழ் 4

போன் : 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 2 ஷவ்வால் 3 [14-2-67] செவ்வாய்க்கிழமை

சென்னை, பெப். 13

தமிழ்நாட்டில் தேர்தலுக்கு இன்னும் இரண்டே இரண்டு நாட்கள் இருக்கின்றன. இன்றுடன் கூட்டங்கள் கூச்சல்கள், கோஷங்கள் குழப்பங்கள் கலாட்டா, கல்லெறி ஊர்வலங்கள் எல்லாம் நின்றுவிடும், நாளை வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டுவார்கள். தேர்தல், 15. 18, 21-ம் தேதிகளில் நடைபெறும். 15-ம் தேதி 13 டெல்லி பாராளுமன்றத் தொகுதிகளுக்கும் 79 சட்டசபைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறும். 15-ம் தேதி, காங்கிரஸ் தலைவர் காமராஜர் போட்டியிடும், விருதுநகர், தி. மு. க. தலைவர் அண்ணாதுரை போட்டியிடும், தென் சென்னை, தமிழரசு கழகத் தலைவர், ம. பொ. சிவஞானம் போட்டியிடும், தியாகராய நகர், எம். ஜி. ராமச்சந்திரன் போட்டியிடும் பரங்கிமலை, மு. கருணாநிதி போட்டியிடும்

(8-ம் பக்கம் பார்க்க)

மங்களஎலியா கொலை

## பொடிஅப்புஹாமி தூக்கிலிடப்பட்டார்

கொழும்பு, திங்கள்

மங்களஎலியா கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஆர். பி. பொடி அப்புஹாமி இன்று காலை எட்டு மணிக்குத் தூக்கிலிடப்பட்டார். அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட சில நிமிட நேரத்துக்குள் அவரது கண்கள் அகற்றப்பட்டு கண்தான சங்கத்திடம் வழங்கப்பட்டது. ஆர். எல். பொடிஅப்புஹாமி, தான் இறந்த பின்னர் தனது கண்களை கண்தான சங்கத்துக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் விமலாவதி என்ற அழகிய பெண்ணைக் கொலை செய்ததாக முன்னாள் பாடசாலை ஆசிரியர் ஆர். எல். பொடிஅப்புஹாமிமீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. விசாரணையின்போது இவர் தலைமறைவாக இருந்தார். ஆறு மாதங்களுக்குப் பின்னர் மொன்ருகலையில் ஒரு சேனையில் பொடி அப்புஹாமியைப் பொலிஸார் பிடித்தனர். வழக்கு விசாரணை முடிவில் இவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனையை எதிர்த்து பொடி அப்புஹாமி இரண்டு தடவைகள் அப்பீல் செய்திருந்தார். ஆனால் இவரது அப்பீல் நிராகரிக்கப்பட்டது. தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதற்காக இவர் சில மாதங்களுக்கு முன்னர் அழைத்து செல்லப்பட்ட பொழுது கவர்னர்ஜெனரலின் உத்தரவின் மீது தண்டனை நிறைவேற்றம் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இன்று காலையும் தண்டனை நிறைவேற்றுவதற்கு முன்னர் தண்டனையைத் தடுப்பதில் முயற்சி மேற்கொள்ளப்பட்ட தென்றும் ஆனால் அது தோல்வியடைந்தது என்றும் தெரிய வருகிறது

# அண்ணா மீது வீசிய கல்

## அரங்கண்ணல் தடுத்தார்

## ராஜாஜி முன்னும் ஒரு கல் விழுந்தது

— நமது நிருபர் கா. யோகநாதன் —

சென்னை, பெப்ரவரி 13

**திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரையை நோக்கி நேற்று ஒரு கல் வீசப்பட்டபோது, அண்ணாவின் அருகே நின்ற திரு. அரங்கண்ணல் அதைத் தடுத்துவிட்டார்.**

நேற்று நண்பகல் மயிலாப்பூர்த் தொகுதியில் வீதி வீதியாக திரு. அண்ணாதுரை 'ஜீப்'பில் வந்தார். ஒவ்வொரு வீதியாகச் சென்றுவிட்டு வாராவதிப் பகுதிக்கு வந்தபோது, அவரை நோக்கி ஒரு கல் வீசப்பட்டது. அவர் முகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த கல்லை அவர் அருகே நின்ற திரு. அரங்கண்ணல் தடுத்துவிட்டார்.

### ராஜாஜி முன் விழுந்த கல்

இங்கு இப்பொழுது தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் கற்கள் வீசப்படுவது சாதாரண சம்பவமாகிவிட்டது. வடநாட்டில் மட்டும் நிலவி வந்த வன்முறைச் செயல்கள் இங்கும் சென்ற சில தினங்களாக அதிகரித்துவருகின்றன. நேற்றிரவு தியாகராய நகரில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் ராஜாஜி, ம. பொ. சி. கருணாநிதி ஆகியோர்கள் பேசினார்கள்.

ம. பொ. சி. பேசிக்கொண்டிருக்கையில் அதை ராஜாஜி செவிமடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தார். அச்சமயம் திடீரென்று பெரிய கல் ஒன்று மேடையில் ராஜாஜி முன் விழுந்தது. மேடையிலும் கூட்டத்திலும் பரபரப்பு ஏற்பட்டது. ராஜாஜி எந்தவித பரபரப்பும் இன்றி அமைதியாக இருந்தார். ம. பொ. சி. 'இந்தத் திருவிளையாடல் எல்லாம் 13-ம் திகதி வரை தானே' என்றார்.

காஞ்சீபுரத்தில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் கைகலப்பில் ஒன்பது பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஊர்வலங்களுக்கும் கூட்டங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளன.

பிரதமர் இந்திரா காந்தி மீது கல் வீசப்பட்டதை திரு. அண்ணாதுரை இங்கு ஒரு கூட்டத்தில் வன்மையாகக் கண்டித்தார்.

ஆனைக்கோட்டையில்

## துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலி

### சந்தேகநபர் தலைமறைவு

யாழ்ப்பாணம், செவ்

ஆனைக்கோட்டையில் நேற்று முன்தினம் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் சூடுதுப்பாக்கிச் நடந்த ஸ்தலத்திலேயே மரணமானார்.

துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானவர். ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரான எஸ். சோமசுந்தரம் என்பவரென பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள. கைகைகலப்பொன்றை தொடர்ந்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

சந்தேகநபரான கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கத்தை பொலிஸார் தேடுகின்றனர். அவர் தலைமறைவாக விருப்பதாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் துப்பாக்கிச் சூடு நடந்த இடத்துக்கேசென்று ஸ்தல விசாரணை நடத்தினார். யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம்காலஞ் சென்றவரை பிரேத பரிசோதனை நடத்தினார்.

ஆனைக்கோட்டைபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் மேலும் புலன்விசாரணைசெய்கின்றார். [ந.நி[

## பௌர்ணமி தின கலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம். செவ்.

யாழ்ப்பாண மாநகரசபை அளித்துவரும் பௌர்ணமி தின கலை நிகழ்ச்சிகள் தொடரில் 1967 ம் வருடத்துக்கான இரண்டாவது நிகழ்ச்சியாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை 24-2-67 மாலை 6-30 மணிக்குசுண்டிக்குளி யாழ். நாடகக் கலாமன்றம் அளிக்கும் சமூக சீர்திருத்தநகைச்சுவை நாடகமான 'அடங்காப் பிடாரி' யாழ், திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

## "உற்பத்தி மாவட்டமாக வவனியாவைமாற்றுவோம்"

### விவசாய விஸ்தரிப்பு நிலைய திறப்பு விழாவில் அரசாங்க அதிபர்

வவனியா, திங்கள்

'ஒருநாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்த நாட்டுக்கு விவசாய விஸ்தரிப்பு நிலையங்கள் அவசிம் தேவை. நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு தேவைப்படும் விவசாயப் பொருட்கள், விதைகள், மருந்து வகைகள் போன்றவை சுலபமாக அவர்களுக்கு கிடைக்க வழிசெய்ய வேண்டும். இன்று நான் இவ்விவசாய விஸ்தரிப்பு நிலையத்தை திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நாட்டில் இப்படியான நிலையங்கள் இல்லாதது நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு ஒரு காரணமாகும். இப்படியான ஒரு ஸ்தாபனத்தில் விவசாயிகள் தங்களுக்குவேண்டிய விதை பொருட்களை சுலபமாகப் பெறமுடியும். விவசாயிகளின் கையில்எப்பொழுதும் பணம் இருப்பதில்லை. பணம் இருந்தால் அவன் தமக்கு வேண்டிய விவசாய உற்பத்தி பொருட்களை முன் கூட்டியே வாங்கி வைத்திருப்பான். இப்படிப்பட்ட நிலையில் எல்லாக் காரியாதிகாரிகளின் பிரிவிலும் ஒவ்வொரு விவசாய விஸ்தரிப்பு நிலையம் திறந்து அதன்மூலம் விவசாயிகட்கு உதவிசெய்ய வேண்டும்.

இவ்வாறு வவனியா அரசாங்க அதிபர் திரு. வி. சி. பேரேரா வவனியாவில் புதிதாக விவசாய விஸ்தரிப்பு நிலையத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

இந்த நிலையத்தை தேசிய கீதத்துடன் தொடக்கி வைத்த அரசாங்க அதிபர் தாம் கடமையாற்றிய எந்த இடத்திலும் இப்படியான விவசாயிகளுக்கான வசதி செய்யப்படவில்லையென்றும் இதையிட்டு தான் விவசாயப்பகுதி தலைவர் திரு. பி. மாணிக்கவாசகரை பாராட்

6-ம் பக்கம் பார்க்க

## 12 தினங்களில் 25 கொலைகள்

கொழும்பு, திங்கள்

சென்ற பன்னிரண்டு தினங்களுக்குள் நாட்டில் 25 கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. கடைசியாக நடந்த கொலை யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் சோமசுந்தரம் வீதியில் சோமசுந்தரம் என்பவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவமாகும்.

1967-ம் ஆண்டு பிறந்து 43 தினங்களுக்குள் நாட்டில் 95 கொலைகள் நிகழ்ந்துள்ளன. இது 1966-ம் 1965-ம் வருடத்திய கொலை விகிதங்களை விட [illegible] கொலைச் செயல்கள் அதிகரித்து வரும் விகிதத்துவரும் விகிதத்தைக் கண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கவலை தெரிவித்திருக்கிறார். குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டு பிடிப்பதிலும் குற்றச் செயல்களைத் தடுப்பதிலும் உஷாராக இருக்க வேண்டுமென்று பொலிஸ் அதிகாரிகளை பொலிஸ் அதிபர் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பெண் விற்பனையாளர்:

பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். சம்பளம் ரூபா 10-00. விஞயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1536

ஆயுள்வேதவைத்தியர்

கொழும்பிலுள்ளவர்த்தக நிலயம் ஒன்றில் முழு நேரம் அல்லது பகுதி நேரம் வேலை செய்வதற்கு ஒரு ஆயுள் வேத வைத்தியர் தேவை. தராதரம்— கொழும்பு, ஆயுள்வேத கல்லூரியிடமிருந்தும் பிரசித்திபெற்ற கோயில்களிலிருந்தும் ஆயுள் வேத வைத்தியர் என்ற நற்சாட்சிப் பத்திரம். சம்பளம்—அரசாங்கவிகிதத்தின் படி. விளம்பரஇல. 1533, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1533

முகாமையாளர்:

நீர்வேலி வடக்கு இலக்குமி ஐக்கிய பண்டசாலைக்கு முகாமையாளர் தேவை. கூட்டுறவுப் பயிற்சியில் விசேட சித்தியும் கடை அனுபவமும் உடையவராய் இருத்தல் வேண்டும். இரண்டு நற்சாட்சிப்பத்திரத்துடன் வரவும். சம்பளம் 120/- காசுப்பிணை 1500 - ஆதனப்பிணை 2000/- விண்ணப்பமுடிவு திகதி 20-2-67. தலைவர், இ. செல்லத்துரை, ''அருள் அகம்'' நீர்வேலி வடக்கு. 1534

### விற்பனைக்கு

வான்:

நல்ல நிலைமையிலுள்ள CV போர்ட் 8 வான் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க - அ. சிவஞானம், 359/6, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1535

காணி ஆதனங்கள்

இருபாலையிலும் கல்குடாவிலும் காணி ஆதனங்கள் உடனடியாக விற்பனைக்குண்டு. விசாரணைகளை ஆங்கிலத்தில் உடனடியாக கீழ்க் காணும்விலாசத்துடன்வைத்துக்கொள்ளவும். சோமாதேவி பிளேஸ், கிரிலப்பனை, கொழும்பு-5. 1524

### வாடகைக்கு

வீடு:

சகல வசதிகளும் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு. கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். தி. செல்வராசா, 19, பி. ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 2341

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# இறந்தவரின் வயிற்றில் நஞ்சு இருந்தது

## புலன் விசாரணை செய்ய பொலிஸாருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்தவரும் 7 பிள்ளைகளின் தந்தையுமான அருணாசலம் துரையப்பா [வயது 55] என்பவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் திடீரென மரணமானது சம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினுர்.

காலஞ் சென்றவரின் மனைவியான மங்கையற்கரசி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது: காலஞ்சென்றவர் எனது கணவர். அவர் கலட்டி அம்மன் கோவிலில் பூஜை செய்பவர். எங்களுக்கு 7 பிள்ளைகள் உண்டு. சம்பவம் நடந்த தினத்தன்று சந்தைக்குப் போய் மரக்கறிகளை வாங்கி கொண்டு வந்து விட்டு நண்பகல் 1 மணியளவில் குடிப்பதற்கு தண்ணீர் தரும்படி என்னிடம் கேட்டார். நான் தண்ணீர் கொடுத்த சிறிது நேரத்தில் நெஞ்சுக்குள் ஏதோ செய்வதாகவும், சுவாசிக்க முடியவில்லை என்றும் கூறிக்கொண்டு நிலத்தில் வீழ்ந்து விட்டார். பின்னர் ஆஸ்பத்திரிக்கு நாம் கொண்டு சென்ற சிறிது நேரத்தில் அவர் இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. காலஞ் சென்றவரின் மகனுன சிவபாலன் சாட்சியமளிக்கையில், காலஞ் சென்ற தனது தகப்பனுக்கு எந்தவிதமான மனக்கவலையுமே இல்லையெனத் தெரிவித்தார்.

காலஞ் சென்றவரைப் பிரேத பரிசோதனை செய்த டாக்டர் திரு. எஸ். சுப்பிரமணியம் காலஞ் சென்றவரின் குடலுக்குள் கிருமிநாசினி இருந்ததாகத் தெரிவித்தார்.

சாட்சிகளின் சாட்சியங்களுக்கும், பிரேத பரிசோதனை செய்த டாக்டரின் சாட்சியத்துக்குமிடையில் முரண்பாடிருப்பதால் தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்த மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம், இம் மரணம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸாரை பூரண விசாரணை ஒன்றை நடாத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை நாளை வரை ஒத்தி வைத்துள்ளார். [ந. நி.]


## விளம்பரம்

### நெசவு ஆசிரியை நெசவாளர்கள் தேவை

கைத்தறி நெசவு நிலையத்துக்குப்பொறுப்பாகக் கடமையாற்றக்கூடிய தேர்ச்சி பெற்ற நெசவு ஆசிரியர்களிடமிருந்துமேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ச்சி பெறுதவர்கள் 5 வருட பயிற்சி அனுபவம் உடையோராயின் விண்ணப்பிக்கலாம்.

கைத்தறி நெசவு நிலையத்தில் வேலைபார்ப்பதற்கு அனுபவமுள்ள நெசவாளர்களிடமிருந்தும் [பெண்கள்] விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில்பற்றிய அனுபவங்கள் குறிப்பிடப்பட்டு காரியதரிசி, தீவுப்பகுதி ப. நோ. கூ. ச. சமாசம், ஊர்காவற்றுறை என்ற விலாசத்திற்கு 25-2-67 க்கு முன்விண்ணப்பங்கள் அனுப்பப்படல்வேண்டும். மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் சமாஜத்தலைமைக்கந்தோருடன் தொடர்பு கொள்ளவும்.

தீவுப்பகுதி ப. நோ. கூ. ச. சமாசம், ஊர்காவற்றுறை.

1067


## நெசவு நிலைய திறப்பு விழா

சுழிபுரம், திங்கள்

செம்பாட்டம் தோட்டம் கைத்தறிநெசவு நிலையத் திறப்புவிழா எதிர்வரும் வியாழக்கிழமை (16-2-67) பிற்பகல் 5- 30 மணிக்கு நடைபெறும். நெசவுநிலயத்தை வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்திரு. அ. அமிர்தலிங்கம் திறந்துவைப்பார். இவ்வைபவத்தில் வலி. மேற்குழகாரியாதிகாரி திரு, மாணிக்க நடராசாவும் கலந்துகொள்வார். திறப்புவிழாவையடுத்து பொதுக் கூட்டமும்நடைபெறும்.

# பிரஜா உரிமை அளிப்பதில் யாருக்கு முதலிடம்?

## பார்லிமெண்டில் பீலிக்ஸ் விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

அக்டோபர் 1964ல் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், 1949ம் வருடத்தைய இந்திய, பாகிஸ்தானிய குடியிருப்பாளர் பிரஜாவுரிமை மசோதாவின்கீழ் இலங்கைப் பிரஜாவுரிமை கோரி, விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படாதோர், இலங்கைப் பிரஜாவுரிமை அளிக்கப்படுவதில் முதலுரிமை பெறுவர்.

இலங்கை, இந்திய அதிகாரிகளுக்கிடையில் 1964ம் ஆண்டு டிசம்பர் 15க்கும், 19க்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளில் இதுவும் ஒன்றுகும். இம்முடிவுகள் பின்னர் இலங்கை, இந்தியஅரசாங்கங்களினுல் அங்கீகரிக்கப்பட்டன.

இம்முடிவுகளின்படி, ஏற்கனவே இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு முதலுரிமை அளிப்பதுடன், மற்றவர்களிடமிருந்தும் விண்ணப்பங்களைப் பரிசீலனைசெய்யத் தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் ஒப்புக் கொண்டது.

இவ்விதம் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி, இலங்கைப் பிரஜாவுரிமை அளிப்பதில் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் மற்றைய விபரங்கள் முறைப்படி வருமாறு-

விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவரா, விண்ணப்பதாரர் இலங்கையில் வாசம்செய்த காலம், வம்சாவழியாகவோ அல்லது பதிவு மூலமோ இலங்கைப் பிரஜைகளாகிய சில அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பத்தைச் சார்ந்த ஓர் உறுப்

[5ம் பக்கம் பார்க்க]

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### செவ்வாய் 14 - 2 - 67

செய்திகள்; காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 குரல்வகை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச்சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி- வைஜயந்திமாலா
வஞ்சிக்கோட்டை வாலிபன்
[புத்தம்புதிய கொப்பி]

REGAL - JAFFNA
NOW SHOWING
Robert morse
& Anjanette Comer
in
THE LOVED ONE (Adults)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
நவா
கொம்பனித்தெரு
கிங்ஸ்லி — கொழும்பு
பிளாஸா — வெள்ளவத்தை
வெலிங்டன் — யாழ்ப்பாணம்
விஜயா — மட்டக்களப்பு
ஸ்ரீ கிருஷ்ணு — திருமலை
விஜிதா — ஹட்டன்
அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்! கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!! அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்
காக்கும் கரங்கள்

5-வது வாரம்
கெப்பிட்டல் — கொழும்பு
மொடேர்ன் — பண்டாரவளை
எம். ஜி. ஆர்., ரத்னு,
கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்
தொழிலாளி

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
ஹபிலி ஹான்
[ஹிந்தி]

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
The Devil Ship Pirates




குறைந்த விலை! கூடிய பாவனை!
'சின்டெக்ஸ்' நைலோன் சேலைகள்
15 க்குக் குறையாத அழகிய
கண்கவர் நிறங்களில் தருவித்திருக்கிறோம்.
விலை ரூபா: 39-50 மாத்திரம்.
டயறம்ஸ்
54, பெரிய தெரு யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க குண்டுவீச்சு தற்காலிக நிறுத்தம்

## ஹனோயின் நடவடிக்கைகளை வாஷிங்டன் கவனிக்கிறது

### தென்வியட்னுமில் ஒருநாள் தரைச் சண்டையில் 246 துருப்புகள் மாண்டனர்

வாஷிங்டன், பெப்ரவரி 13

வடக்கு வியட்னும் மீது விமானத் தாக்குதல்களையோ அல்லது குண்டு வீச்சையோ நடத்தவேண்டாமென்று அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸன் உத்தரவிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து விமானத் தாக்குதல்கள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டுள்ளன.

இதற்கிடையே வியட்னும் [புதுவருட] நான்கு நாள் போர் ஓய்வு நேற்று முடிவடைந்ததைத் தொடர்ந்து நேற்றுக்காலை தென்வியட்னும் நேரப்படி 7 மணிக்குத் தரைச்சண்டை ஆரம்பமானது. தென் வியட்னுமில் நேற்று வியட்காங்கியருக்கும் தென் வியட்னும் துருப்புகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 246 துருப்புகள் மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச் சண்டையில் அமெரிக்கத் துருப்புக்களும் ஈடுபட்டிருந்த போதிலும் எத்தரப்புக்கு அதிக சேதம் என்பது உடனடியாகத் தெரியவில்லை.

தரைச்சண்டைகள் நேற்று ஆரம்பமான பொழுதிலும் வடக்கு வியட்னும் மீது குண்டு வீச்சு மீண்டும் தொடங்கவில்லை என்று வாஷிங்டன் வட்டாரங்கள் தெரிவித்தன. சமாதானப் பேச்சுக்களில் வடக்கு வியட்னும் நாட்டம் காட்டுகிறதா என்பதை அமெரிக்கா அவதானித்துவருகிறது என்றும் ஹானோயின் நடவடிக்கையில்தான் விமானத்தாக்குதல்களோ அல்லது குண்டு வீச்சு ஆரம்பமோ தங்கியிருக்கிறதென்றும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருர்வ தெரிவித்துள்ளார்.





### வில்ஸன் கோரிக்கை

வடக்கு வியட்னும் மீது குண்டு வீச்சைத் தொடங்க வேண்டாமென்று அமெரிக்க அதிபரை பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் வில்ஸன் கேட்டுள்ளார்.

குண்டு வீச்சைத் தடுத்திருப்பது சமாதானப் பேச்சுக்கு வழிவகுக்குமென்றும் இதன் மூலம் சமாதானப் பேச்சுக்களுக்கு வருமாறு வடக்கு வியட்னுமை ரஷ்யா பணிக்கும் வாய்ப்புக்கிடைக்குமென்றும் திரு. வில்ஸன் அமெரிக்க அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன்விடுத்துள்ளசெய்தியில் சமாதானப் பேச்சை தொடங்குவதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டுக் குண்டு வீச்சு நிறுத்தப்பட்டுள்ளதென்றும் ஆனல் இதனை நீடிக்க முடியாதென்றும் தெரிவித்துள்ளார்.

### விமானங்கள் சுடப்பட்டன

ஹானோய் வானொலியில் நேற்று விடுத்த செய்தி ஒன்றில் வடக்கு வியட்னும் மீது அமெரிக்க விமானங்கள் பறந்து சென்றன என்றும் இரண்டு விமானங்கள், சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும் தெரிவித்துள்ளது. ஆனல் குண்டு வீச்சு நடைபெற்றதா என்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைத்தலைவர் இலங்கை விஜயம்

லண்டன், பெப். 13

சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் சிரேஷ்ட கமிஷனர் ரியர் அட்மிரல் ரோஜர் டிக் இம்மாதம் 13-ந் திகதி விமானமூலம் இலங்கை செல்வார். அவர் பெப்ரவரி 17-ந் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்.

30,000 மைல் உலக சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கும் அட்மிரல் டிக் இலங்கை உட்பட ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிஜி, போன்ற நாடுகளுக்கும் விஜயம் செய்கிறர். அட்மிரல் டிக் 1921-ம் ஆண்டு ஒரு கடற்படை அதிகாரியாக முதல் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

அட்மிரல் டிக் இலங்கை வந்ததும் பெப்ரவரி மாதம் 14-ந் திகதி காலை, சென். ஜோன்ஸ்அம்புலன்ஸ் தலைமைக்காரியாலத்திற்கு விஜயம் செய்வார். பின்பு, அவர் பிரிட்டிஷ் ஹைகமிஷனர்சேர். ஸ்டான்லிதொம்லின்சனை சந்திப்பார். அன்று சாயந்தரம் காலி முகத்திடலில் சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் அணிவகுப்பொன்றை பார்வையிடுவார்.

பெப்ரவரி மாதம் 15-ந் திகதி நடைபெறவிருக்கும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் அவர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். பெப்ரவரி 16-ந் திகதி அவர் ராணிமாளிகைக்குச் சென்று மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவைச்சந்திப்பார். மறுதினம் காலை அவர் கொழும்பிலிருந்து சிங்கப்பூர், மார்க்கமாய், அவுஸ்திரேலியாவுக்குப்புறப்படுவார்.

அட்மிரல் டிக் எதிர்வரும் ஜூன் மாதம் 24-ந் திகதி தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உலக சுற்றுப்பிரயாணம் அவரது பிரியாவிடை விஜயமாக அமையும்.

## வெடி மருந்து லொறி வெடித்து 10 பேர் பலி

சைகோன், பெப். 13

வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று விபத்துக்குள்ளானதில் பத்து தென் வியட்னும் அரசாங்க துருப்புகள் பலியானர்கள். காயமடைந்த ஆறுபேரின் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் மத்திய சைகோனில் நேற்று நிகழ்ந்தது.

வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற லொறியில் விபத்து ஏற்பட்டு லொறி வெடித்துச் சிதறியது என்று அறிவிக்கப்பட்டதே தவிர இந்த விபத்துக்கான காரணம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

## 'மாவோ ஆதரவாளர்களுக்கு ஆயுதங்கள் அனுப்புக'

### லார்ஸா வானொலி கோரிக்கை

லார்ஸா, பெப். 13

திபேத்தில் மா-ஸே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிரிகளுக்குமிடையே கடுமையான மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன என்று கூறப்படுகின்றது.

மா-ஸே-துங் ஆதரவாளர்களிடமிருந்த ஆயுதங்களை எதிர்ப்புப்படையினர் கைப்பற்றியுள்ளனர் என்றும், மா-ஸே-துங் ஆதரவாளர்கள் இப்பொழுது ஆயுதங்கள் எதுவுமின்றி உள்ளனர் என்றும் லார்லா வானெலி தெரிவித்துள்ளது.

மா-ஸே-துங் ஆதரவாளர்களுக்கு ஆயுதங்களை உடனடியாக அனுப்புமாறு பீகிங்குக்கு லார்ஸா வானொலி கோரிக்கைவிடுத்துள்ளது.

## மாணவர்கள் நீதிமன்றம்

காசி, பெப்: 13

காசி இந்து பல்கலைக் கழகத்தில், இந்திய தலைமை நீதிபதி நேற்று மாணவ நீதிமன்றமொன்றை ஆரம்பித்து வைத்தார்.

பல்கலைக்கழக மாணவர்களில் கௌரவ நீதிபதியையும் ஆறு நீதிபதிகளையும் இந்திய பிரதம நீதியரசர் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மாணவர்களிடையே எழும் பிரச்னைகளையும் ஒழுக்கக் குறைவுகளையும் மாணவர்களே தீர்த்து வைக்க இப்பல்கலைக்கழக நீதிமன்றம் உதவும் என்றும் இதன்மூலம் மாணவர்களின் கஷ்டங்கள் குறையும் என்றும் நீதியரசர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக நீதிமன்றமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

## 'புரட்சி மக்கள் வெற்றிபெறுகின்றனர்'

—சென் - யீ

பீகிங், பெப். 13

கம்யூனிஸ்ட் புரட்சி மக்கள் புதிய வெற்றிகளை நாட்டியுள்ளனர் என்று சீன வெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்-யீ தெரிவித்துள்ளார். பீகிங்குக்கு விஜயம் செய்த மொரேஷியஸ் தூதுக்கோஷ்டியினரைக் கௌரவிக்கும் முகமாக நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் தான் மார்ஷல் சென்-யீ மேற்கண்டவாறு கூறினர்.

சீன மக்களின் புரட்சிதான் ஏகாதிபத்திய குடியேற்ற ஆதிக்கப் போராட்டத்துக்கு முடிவு கட்டும் என்று குறிப்பிட்ட மார்ஷல் சென்-யீ, புரட்சி மக்களுக்குத் தோல்வியே கிடைப்பதில்லை என்றும் இன்னும் பல வெற்றிகள் இவர்களுக்குக் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

## பீகிங்கில் நடைபெறும் ரஷ்ய எதிர்ப்பு "போராட்டம்"

பீகிங், பெப். 13 [டாஸ்]

சீனவின் பாரம்பரியமான புத்தாண்டுத்தினம் ஒன்றின் போது, புன்ஹியாங் முனையில் ஷியாங்காய்ஷேக் கும்பலை எதிர்த்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த விடுதலை இராணுவத்துக்கு யுத்த நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எதிரிகள் சீனப் புத்தாண்டு சமாதான நிலையில் கொண்டாடுவதற்காகவே இந்த ஒருநாள் யுத்த நிறுத்த உத்தரவு விதிக்கப்பட்டது. ஆனல் 'செங்காவலர்' களினதும் 'கலகக்காரர்' களினதும் சோவியத் விரோத செயல்களுக்கு ஓய்வு நாளே கிடையாது.

பீகிங்கிலுள்ள சோவியத் ஸ்தானிகராலயத்திற்கு எதிராக இவர்களின் 'போர்' ஓயாது நடந்தது. சோவியத் ஸ்தானிகராலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கிகள் தொடர்ந்தும் இடைவிடாது 'ஒலி'த்துக் கொண்டிருக்கின்றன. அதிகாலையிலிருந்து நடுநிசி வரை இவை கூச்சலிட்டபடியே உள்ளன. சோவியத் யூனியனுக்கும் சோவியத் மக்களுக்கும் எதிராக இவர்கள் ரஷ்ய மொழியிலும் சீன மொழியிலும் அபாண்டங்களையும், அச்சுறுத்தல்களையும் சாபங்களையும்விடுக்கிறர்கள் சோவியத் ஸ்தானிகராலயத்தின் வாசலில் சோவியத் பிரஜைகளின் 'கொடும்பாவி'கள் கட்டி எரிக்கப்படுகின்றன. ஸ்தானிகராலயத் தொலைபேசி சதா கிணு கிணுத்துக் கொண்டேயிருக்கின்றது. ஆனல்

15-ம் பக்கம் பார்க்க!



உத்தர பிரதேசத்தில் நிலவும் வரட்சி காரணமாகப் பல இடங்களிலும் இப்பொழுது கிணறுகள் வெட்டப்பட்டு வருகின்றன. கொறக்பூர் அரசினர் விவசாயப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் ஹமிர்பூர் என்னும் கிராமத்தில் கிணறு ஒன்றை வெட்டுவதை இங்கு காணலாம். கிராமப் புறங்களில் மாணவர்கள். இம்மாதிரிப் பல கிணறுகளைத் தோண்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நமது மனதிலே அமைதியைக் குலைக்கக் கூடியதும், நமது மேலான வாழ்க்கைக்கான முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடியதுமான பழைய நினைவுகளை, இறைவன் சிந்தனை மூலம் ஒதுக்கி மறந்துவிட வேண்டும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA
Telegram: EELANADU Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மாசி மீ 2 [14-2-67]

## வங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் தொடங்கி இன்றுடன் பதினுன்கு நாட்களாகி விட்டன. வேலைநிறுத்தம் முடிவடைவதற்கான அறிகுறிகளைத்தையுங் காணவில்லை. 'வருமுன் காப்போனுக' நடந்து கொள்ள வேண்டியவர்கள், 'வந்தபின் காப்போனுக' வேனும் நடந்து கொள்வதாகக் காணேம்.

நாலாயிரம் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதால் இது பெரிய விஷயமல்ல என்று கருதிவிட முடியாது. வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களும் அவர்களது குடும்பங்களும், வேலைநிறுத்தத்தை நீளக் கயிற்றில் விட்டுப் பிடித்தால் வழிக்கு வருவார்களென நினைத்தால் அது விவேகமாகாது. வங்கி ஊழியர் அன்றுட உழைத்து வாழ்பவர்களல்லர். வேலை நிறுத்தத்தில் நாலாயிரம் ஊழியர்களே சம்பந்தப் பட்டிருந்தாலும், நாட்டின் தொழில்கள், வர்த்தகம், மற்றும் நாட்டின் பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட மிகமுக்கியமான பொறுப்பு வங்கிகளிடம் உள்ளது. வங்கிகளில் பெரிய முதலாளிகளும் செல்வந்தர்களுமே நேரடியாகத் தொடர்புடையவர்களாக இருப்பினும் வங்கி ஊழியரின் வேலை நிறுத்தம் சாதாரண எளிய மக்களையே பெரிதும் பாதிக்கும். மாதத் தொடக்கத்தில் வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் ஆரம்பித்ததால் விவசாயி, சிறு தொழில் செய்வோர், சில்லறை வியாபாரிகள், வர்த்தக ஸ்தாபனங்களில் மாதம் முடிந்ததும் பல பிரச்னைகளைத் தீர்ப்பதற்குச் சம்பளத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஊழியர்கள் ஆகியோரே பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். இவர்கள் தவிர பெரிய தொழில்களும் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளும், பாதிக்கப்பட்டு ஏற்கனவே மோசமடைந்திருக்கும் நாட்டின் பொருளாதார நிலையை மேலும் மோசமாக்கிவிடும். வேலைநிறுத்தம் செய்யும் வங்கி ஊழியர்களுக்கு குறைகளில்லாமலில்லை. அவர்கள் எடுத்த இதர முயற்சிகளும் வெற்றியளிக்காமல் போயிருக்கலாம். ஆயினும் நாட்டின் இன்றைய உணவு நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, வேலையின்றி கஷ்டப்படும் லட்சக்கணக்கான இளைஞர்களின் நிலை, ஒரு வேளை உணவுக்கே வழியின்றிப் பட்டினி கிடக்கும் எளிய குடும்பங்களின் பரிதாப வாழ்க்கை ஆகியவைகளையும் வேலை நிறுத்தம் செய்யும் வங்கி ஊழியர் நினைத்துப்பார்க்க வேண்டும். வங்கி ஊழியர், தங்கள் குறைகளைப்பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க முயற்சி செய்யவேண்டுமே தவிர வேலைநிறுத்த நடவடிக்கைகளில் இன்றுள்ள நிலையில், ஈடுபடுவது நல்லதல்ல.

இதே சமயம் வங்கி நிர்வாகிகளும் தொழில் அமைச்சரும் இந்த வேலை நிறுத்தத்தைப் பற்றி அக்கறைக் குறைவாக இருக்க முடியாது. "ஏதோ முயற்சி செய்தோம், எங்களால் முடியவில்லை" என்று கடைசிக் கட்டத்தில் பொறுப்பை பிரதமரிடம் விடுவதை விட இப்பொழுதே இப்பிரச்னையைப்பிரதமரிடம் விடுவது நல்லது.

## வடபகுதிக்குக் கப்பல்

வடபகுதித் துறைமுகங்களுக்கு மாதம் ஒரு சரக்குக் கப்பலாவது அனுப்பப்படவேண்டும் என்று கூட்டுறவுச்சங்கமொன்று அரசாங்கத்தைக் கோரியிருக்கிறது. இக்கோரிக்கைக்கு அரசாங்கம் உடனடியாகச் செவிசாய்க்குமென்று நம்புவோம்.

கொழும்புத் துறைமுகத்தில் அடிக்கடி வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டு ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்த சமயத்தில் உணவுக் கப்பல்களும், சரக்குக் கப்பல்களும் சில காங்கேசன் துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் திருப்பிவிடப்பட்டன. வடபகுதிக்குத் திருப்பிவிடப்பட்ட கப்பல்களில் சுறு சுறுப்பாக வேலைநடைபெற்று கப்பல்[illegible]ள் விரைவாகவே திரும்[illegible]ச்சென்றன. கொழும்[illegible] துறைமுகத்தில் ஏற்று[illegible] இறக்குமதி வேலைகள் [illegible]க்கப்பட்டதால் நாட்[illegible] வருமானம் பாதிக்கப்பட்டதுடன் அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதுதவிர வெளிநாட்டுக் கப்பல்கள் துறைமுகத்தில் மாதக்கணக்கில் தாமதப்படவேண்டி நேரிட்டதால் கப்பல் தாமதக் கட்டணமாக ஆயிரக்கணக்கான ரூபாய்களை அரசாங்கம் வெளிநாட்டுக் கப்பல் கம்பனிகளுக்குக் கொட்டிக் கொடுக்கவும் நேரிட்டது. வடபகுதித் துறைமுகங்களுக்கு இக்கப்பல்கள்திருப்பி விடப்பட்டதால் இறக்குமதி வேலைகள் துரிதமா[illegible] நடைபெற்று அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு குறைந்ததுடன் கப்பல் தாமதக் கட்டணம் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தமும் இல்லாது போயிற்று. இது தவிர வடபகுதியிலுள்ள பலருக்கு வேலையும் கிடைத்தது. வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை சிறிய அளவு குறைந்தது. வட[illegible] பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர்களும், உணவு மற்றும் அரசாங்கஇலாகா உயர் அதிகாரிகளும் வடபகுதித்துறைமுக ஊழியர்களின் உழைப்பையும், உற்சாகத்தையும் பாராட்டிச் சென்றனர். மாதம் ஒரு கப்பலாவது வடபகுதித் துறைமுகங்களுக்கு அனுப்ப ஒழுங்கு செய்வதாக வாக்குறுதி அளித்தும் சென்றனர்.

1965-ம் ஆண்டில் இப்பகுதிக்கு வந்த கப்பல்களைவிட 1966-ம்ஆண்டில் கப்பல்வருகை குறைந்தது 1967-ம் ஆண்டு ஆரம்பமாகி ஒன்றரை மாதங்களாகிவிட்டன. இதுவரை ஒரு கப்பல்கூட இங்குவரவில்லை. வடபகுதித் துறைமுக ஊழியர்களின் உற்சாகத்தையும் உழைப்பையும் பாராட்டிய அதிகாரிகளும் அமைச்சர்களும் தாங்கள் தெரிவித்த பாராட்டுக்களை மட்டுமின்றி மாதம் ஒரு கப்பலாவது அனுப்புவோம் என்ற வாக்குறுதியையும் மறந்தனர். பாராட்டுப் பெற்ற ஊழியர்கள் பட்டினி கிடக்கின்றனர்.

பாராட்டுப் பட்டினியைப் போக்காது, நிறைவேருத உறுதிமொழியால் யாருக்கும் பயனில்லை. மாதம் ஒரு கப்பலையாவது வடபகுதித் துறைமுகங்களுக்கு அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கை புதியதல்ல. எனவே இனியாவது அரசாங்கம் [illegible] யாவது இங்கு அனுப்ப முன்வர வேண்டும்.

# பல்கலைக் கழகத்தில் இந்து கலாச்சாரம்

## இஷ்டபாடமாக்கப்படவேண்டும்

### உரிய மதிப்புப் பெற்று அபிவிருத்தி அடைய வழி

— எமது விசேஷ நிருபர் —

இலங்கைப் பல்கலைக் கழகத்தில்இந்துக்கலாச்சாரமும் ஒரு பாடமாகப் போதிக்கப்படவிருக்கிறது. இந்தச் செய்தி வரவேற்க வேண்டிய தொன்று மட்டுமல்ல, மகிழ்ச்சிக்குரியதுமாகும். ஆனல், அதேநேரத்தில், பல நூற்றுண்டு காலமாக இந்துக் கலாச்சாரம் தழைத்தோங்கிய ஈழத்திலே இன்றுவரை இந்துக்கலாச்சாரம் பல்கலைகழகப்பாடமாக அங்கீகாரம்பெருதிருத்தமை விசனப்பட வேண்டிய விஷயமாகும் என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

கிழக்கு நாடுகளின் கலாச்சாரம், மதம் மொழி, வாழ்க்கையாவும் இந்துக்கலாச்சாரத்துடன் நெருங்கிய தொடர்புடையவைஎன்பது சரித்திர உண்மையாகும், பௌத்தம் கூட இந்து மதத்திலிருந்து பிறந்ததுதான். இந்துக்கலாச்சாரத்துக்கும் பௌத்த கலாச்சாரத்துக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் கிடையா. இரண்டும் ஒன்ருேடொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும்.

இந்துக் கலாச்சாரம் என்பது இந்திய சமுத்திரம் போன்று விரிவானதும், ஆழமானதுமாகும். இந்த உண்மையை மேற்கு நாடுகளைச் சார்ந்த அறிஞர்கள் ஏற்றுள்ளனர். இந்துக்கலாச்சாரத்தின் மகிமையை உலகுக்கு தர்க்கரீதியாக எடுத்துரைத்த அறிஞர்களில், காலஞ் சென்ற இலங்கையரான ஜேசர் ஆனந்தா குமாரசுவாமியையும், இப்போதைய இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனையும் நாம் விசேஷமாகக் குறிப்பிடக்கடமைப்பட்டுள்ளோம். இவர்கள் மூலமே மேற்கு இந்துக் கலாச்சாரத்தின் பரப்பையும், ஆழத்தையும் உணர முடிந்தது.

பாரத நாட்டில் இந்துக் கலாச்ரசத்துக்கு உரிய மதிப்பும், இடமும் எப்போதோ அளிக்கப்பட்டுவிட்டது, அது இயற்கையே ஏனெனில் இந்தியசரித்திரம் என்ருல், அது இந்துக் கலாச்சாரம் இழையோடும் சரித்திரமேயாகும். இந்தியாவில் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, பல ராஜ்யங்களிலும் இந்துக்கலாச்சாரம் ஒரு பல்கலைக்கழகப் ,பாடமாக இருந்து வருகிறது.

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இந்துக்கலாச்சாரம் பல்கலைக்கழகப்பாடமாக்கப்பட்டிருக்கும் முறை அவ்வளவு வரவேற்கத்தக்கதல்ல. இந்துக்கலாச்சாரம் இவ்வருடம் ஒக்டோபரிலிருந்து தமிழ்ப் பிரிவிலேயே போதிக்கப்படுமென்று தெரிகிறது. பரீட்சார்த்த காலமாக இரு வருடங்கள் சென்ற பின், அதற்குத் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்துவது பற்றி ஆராயப்படுமெனவும் அறியக்கிடக்கிறது.

இந்துக் கலாக்சாரம் போன்ற ஒரு பொதுவான விரிந்து பரந்த பொருளை ஒரு குறிப்பிட்ட பிரிவுக்குள் அடக்கி வைக்க முயல்வது விரும்பத்தக்கதல்ல. இந்தியச் சரித்திரத்தைப் பொறுத்த வரை, அதனைத் தமிழ்ப் பிரிவுக்குள் மாத்திரம் கட்டுப்படுத்துவது முறையல்லவெனக் கருதி, இலங்கைப் பல்கலைக்கழகத்தார் அதனைப் பல்கலைக்கழகக் கலைப்பிரிவு மாணவர்கள் யாவருக்கும் ஓர் இஷ்டபாடமாக்கியுள்ளார்கள்.

இந்துக் கலாச்சாரம் ஒரு தனிப்பிரிவினுள் அடக்கக் கூடிய தொன்றல்ல. அது இலங்கையர் யாவருக்கும் சொந்தமான பாரம்பரிய சொத்தாகும். யாவரும் படித்துணர்த்து பயனடைய வேண்டியது. ஆகவே, அதனை கலைப்பிரிவு மாணவர்கள் எல்லோருக்கும் ஒரு இஷ்ட பாடமாக்க வேண்டியது பல்கலைக்கழக அதிகாரிகளின் பொறுப்பும் கடமையுமாகும். இதை அவர்கள் தாமதமின்றி உடனடியாகச் செய்ய வேண்டும்.

அப்போது தான் இந்துக் கலாச்சாரம் அதற்குரிய மதிப்பையும், அங்கீகாரத்தையும் பெற்றதாகக் கூற முடியும்.

## ஐயாறன் எழுதுவது.....

முதல்நாளன்று மாலையிலிருந்தே பல ஊர்களிலிருந்தும் மக்கள் வர ஆரம்பித்து விட்டனர். இரவில் சமாதி முன்பாக விசேஷ பஜனை நடந்தது. பஞ்சமி திதியன்று அதிகாலை 5 மணிக்கு ஸ்ரீமதி பெங்களூர் நாகரத்தினம்மா [காலஞ்சென்றவர்] டிரஸ்ட் பிரதிநிதிகள் சார்பாக சமாதிக்கு விசேஷ அபிஷேகமும் பூஜையும் ஆரம்பமாயிற்று.

ஸ்ரீ தியாகய்யரை சமாதி வைத்துள்ள இடத்தின்மீது ஒரு துளசி மாடம் கட்டியுள்ளனர். சமாதி கோவிலைச் சுற்றிலும் பிராகாரத்தில் பல துளசிமாடங்களுள்ளன, எல்லாம் அவரது சிஷ்யர்களின் சமாதிகளாம். சுற்றுவட்டத்திலும் பல பல சமாதி கோவில்களுள்ளன. தட்சிணகைலாசமென்றும் திருவையாற்றிலே இறந்தால் முக்திகிடைக்குமென்று யல பெரியார்கள் அங்கு தங்கி தவமிருந்து இறுதிகாலத்தைக் கழிப்பராம். சில சமாதிகளுக்கு இன்று பூஜைகள் நடக்கின்றன. மற்றவை சேதமடைந்துள்ளன. ஸ்ரீ தியாகராஜரின் சமாதியின் மீது ஒரு ஸ்படிகலிங்கமும், பல சாலிக்கிராமங்களும் உள்ளன. துளசி மாடத்துக்கு முன்புறம், ஸ்ரீ தியாகய்யரின் சிலை வைத்துள்ளனர். அதைஸ்தாபித்தது காலஞ்சென்ற பெங்களூர் நாகரத்னம்மாள்தான். ஸ்படிகலிங்கம், சாலிக்கிராமம், புனிதச்சிலை அனைத்துக்கும் அபிஷேகங்களும் ஆராதனைகளும் நடக்கின்றன. ஸ்ரீ தியாகய்யரின் தமையனுரின் குடும்பவழியைச் சேர்ந்தவரான ஸ்ரீ சீனுவாசன் என்பவரே இப்போது பூஜை செய்கின்ருர்.

முதலில் இந்த ஆராதனை முடிந்ததும், உற்சவ சபையார் ஸ்ரீ தியாக பிரம்மத்தின் தங்கப்படத்தை அவர் வசித்த வீட்டிலிருந்து ஊர்வலமாக பஜனைசெய்துகொண்டே சமாதிக்கு வந்தனர். அவர் வசித்த வீட்டை உற்சவசபையார் விலைக்கு வாங்கி பாதுகாத்து வருகின்ருர்கள். அங்கு திதியன்று வைதிக முறையில் சிரார்த்தம் நடக்கின்றது. முகிரி, செம்மங்குடி, எம்பார் முதலிய பல வித்வான்கள் இருந்து அதை பக்தி சிரத்தையுடன் நடத்தினர். ஸ்ரீ தியாகராஜர் விபூதி அணியும் சிவ மதத்தைச் சேர்ந்த ஸ்மார்த்தர் என்ருலும் சமயவேற்றுமையின்றி, பல சமயத்தரும் அவரது இந்த சங்கீத உற்சவத்தில் கலந்து கொண்டுள்ளது. சர்வசமய சர்வதேசவிழாபோல்காட்சியளித்தது. அவர் பாடியது அவரது தாய்மொழியான தெலுங்கில்தான் அர்த்தம் புரியாவிடினும், தமிழர்களே அதிகமாகக்கூடி அவரது கீர்த்தனங்களைப்பாடியும் ரஸித்தும் வருவதைக் காணும்போது, தமிழருக்குச்சிறிதும் மொழி வெறுப்பு இல்லை என்பதையும் காட்டுவதாக இருந்தது.

இந்த உற்சவத்துக்கான செலவு சுமார் 30 ஆயிரத்தில் மூன்றில் ஒருபங்கு ஆகாசவாணி ஒலிபரப்புவதற்காக செலுத்துகிறதாம். மற்றப்பணமும் சுலபமாக வந்து குவிகிறதென்றும், யாரிடமும் சென்று வசூலிக்க வேண்டிய அவசியமில்லைஎன்றும் அறிந்தேன். அரிசி, காய்கறிகள் சாமான்கள் இலவசமாகக்கிடைக்கின்றன. பந்தல்போட ரூ. 1500 ஆகுமாம். ஆனல் தமது கைங்கரியமாக 500க்குப் போடுகின்ருராம். வித்துவான்கள் பலரும் தங்கள் சங்கித காணிக்கையுடன், பணக்காணிக்கையும் செலுத்துகின்றனர்.

சமாதிக்கு நேர்கிழக்கே மேடைபோட்டு, அங்குதான் கச்சேரிகள் நடக்கின்றன. காலைமுதல் கணக்கற்ற நாதசுரக் கச்சேரிகள், பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பல வித்வான்களும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பாடினர். அது நம் உள்ளத்தைத் தொடும் தெய்வீகக்காட்சி. இந்தக்கீர்த்தனைகள் ஐந்தையும் அச்சடித்து அர்த்தத்துடன் வெளியிட்டுள்ளனர்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு விநியோகத்தில் கூட்டுறவு கடைகள் சரியாக இயங்கவில்லை பாவனையாளரின் புகாருக்கு இதுவே காரணம்

## அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் பிரதமர்

கொழும்பு, திங்கள் இன்றையநிலையில் நாட்டின் உணவு உற்பத்திக்கே அரசாங்கம் முதலிடம் அளித்திருக்கிறது என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இன்று இங்கு ஆரம்பமான அரசாங்க அதிபர்களின் மூன்று நாள் மகாநாட்டை தொடக்கிவைத்து பேசுகையில் தான் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்க மேற்கண்டவாறு கூறினர்.



பிரதமர் தொடர்ந்து பேசுகையில் நாட்டின் உணவு நெருக்கடியைத் தொடர்ந்து பங்கீட்டு அரிசி குறைக்கப்பட்டு இலவசமாகவழங்கப்படுவதை மக்வகள் ல்லமனதுடன் ஏற்றுக் கொண்டு விட்டனர் என்று கூறினர்.

''பங்கீட்டரிசி குறைக்கப்பட்டுஉணவுஉற்பத்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து உப உணவு உத்பத்தியில்மக்கள் ஊக்கம் செலுத்தி இருக்கின்றனர். இந்தத் திடீர் ஊக்கம் நாட்டின் பொருளாதார விடுதலைக்கு நிச்சயம் வழிவகுக்கும், அரசாங்கத்தின் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் முழுப்பொறுப்பும் அரசாங்க அதிபர்களிடம் தங்கியுள்ளது. அரசாங்க அதிபர்கள் வெற்றிகரமாக இத்திட்டங்களை நிறைவேற்றுவார்கள் என்பது எனது நம்பிக்கை. உணவு உற்பத்தித்துறையில் பொதுத்திட்டம் முழுவதையுமே அரசாங்க அதிபர்கள்தான்ஏற்கவேண்டும்' என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கூறினர்.

### உணவு விநியோகம்

'கொழும்பிலிருந்து மாவட்டங்கள் தோறும் அனுப்பப்படும் உணவுப் பொருள்கள் பாவனையாளர்களுக்கு சரிவரக்கிடைப்பதில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது. இது வேதனைதரும் சம்பவமாகும் கூட்டுறவுக்கடைகள் சரிவர இயங்குவதில்லை என்பது தான் இதற்குக் காரணம் என்று நான் கூறுவேன். உணவு உற்பத்தியிலும் உணவுப் பொருள்கள் பங்கீடு செய்வதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லோரும் பூரண ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்'' என்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

### ''ஆச்சரியம் அளிக்கிறது''

உணவுப் பொருட்களைப் பங்கீடுசெய்வதில் தவறு விடும் கிரமசேகர்கள் இடமாற்றம் செய்யப்படுவதாகஅறிந்து நான் ஆச்சரியப்பட்டேன், பெரிய குற்றங்களை செய்பவர்களுக்கு சிறியதண்டனை அளிக்கப் படக்கூடாது, தவறு விடும் கிராம சேவகர்கள் பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் ''என்று பிரதமர் கூறினர்.

அரசாங்க அதிபர்கள் மகாநாடு நாளையும் நாளை மறுதினமும் தொடர்ந்து நடைபெறும். செவ்வாய்க்கிழமை நடைபெறும்இரண்டாம்நாள் மகாநாட்டில் ராஜாங்கமந்திரி திரு.ஜே. ஆர். ஜயவர்த்தன உரை நிகழ்த்துவர்ர்.

## 'சுயதேவையைப் பூர்த்தி செய்ய பழகவேண்டும்'

### மாணவர்களுக்கு முன்னுள் செனட்டர் புத்திமதி

யாழ்ப்பாணம், செவ். ''ஒவ்வொரு மாணவனும் பிறர் கையை நம்பி இருக்காது தானே உழைத்து தான் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யப் பழக வேண்டும். அதற்கு ஏற்ற பருவம் மாணவப் பிராயமே. தற்போது நாட்டில் நிலவி வரும் உப உணவுப் பொருள் தட்டுப்பாட்டை நிவிர்த்தி செய்யவும், தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றவும் ஒவ்வொரு மாணவனும் தானே தனக்கென ஒரு தொழிலைப் பழகிக்கொள்ள வேண்டும்''

மேற்கண்டவாறு கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் இராப்போசன விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னுள் செனட்டர் திரு. எஸ். நடேசன் கியூ. சி. பேசுகையில் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் எஸ். ஆர். கனகநாயகம், டாக்டர் ஏ. கபீரியேல் ஆகியோர் உட்பட இன்னும் பலர் பேசினர்கள். ந. நி

'ராஜேஸ்வரி', 'சில்வஸ்பிறேயுடன்'

## 'எலாரு'வும் ஓய்வெடுத்துவிட்டது

### நெடுந்தீவுப் பிரயாணிகள் படும் அவதி

நெடுந்தீவு, திங்கள் நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்குமிடையேயான மோட்டார்படகுசேவைகடந்த ஒருவாரமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனுல் நெடுந்தீவுப்பிரயாணிகள் பெருத்த அவஸ்த்தைக்குள்ளாகியிருக்கிறுர்கள். இப்போதுசேவையிலிருக்கும் தனியார் வள்ளங்கள் கூடாரமோ, பிரயாணிகள் செல்லக்கூடிய வசதியோ அற்றநிலையிலிருப்பதால் பெரும்பான்மையாக பெண்களும் குழந்தைகளும் கடும்வெய்யிலால் பாதிக்கப்பட்டுவருகிறுர்கள்.

நெடுந்தீவு சேவைக்கென ஒதுக்கப்பட்டுள்ள மோட்டார் படகுகள் ''இராஜேஸ்வரி, சில்வஸ்பிறே, எலாரு'' ஆகியமூன்றுமாகும். இவற்றில் முதல் இரண்டு படகுகளும் பலமாதங்களாக திருத்துவதற்காக எடுத்துச் செல்லப்பட்டது. ஆனுல் அவைகள் இன்னும் திருத்தப்பட்டுவரவேயில்லை. மூன்ருவதான 'எலாரு' இடை இடையே சேவையில் ஈடுமட்டு இப்போது அதுவும் என்ஜின்கோளாறு காரணமாக கடந்த ஒரு வாரமாக ஓய்வெடுத்துக் கொண்டது. இப்பகுதிமக்கள் இதனுல் பெருத்த அதிருப்திக்குள்ளாகியிருக்கின்றனர்.

## ''சிறுபான்மையினர் ஊர்வலம் நிச்சயமாக நடந்தே தீரும்''

யாழ்ப்பாணம், செவ்வாய் ''சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளை மீண்டெடுப்பதற்கான போராட்டம் நிச்சயம் நடந்தே தீரும். போராட்டம் எந்த விதத்தில் அமையவேண்டும் என்பது பற்றி எம்மிடையே சில அபிப்பிராயபேதங்கள் இருப்பினும், போராட்டமொன்று நடந்துதான் ஆக வேண்டும் என்பதில் பரிபூரண ஒற்றுமை ஏற்பட்டுள்ளதென்பதை எதிர் வரும் 24-ந் திகதி நடைபெறவிருக்கும் பொது ஊர்வலம் ஊர்ஜிதப்படுத்தப் போகிறது''.

புத்தகலட்டி அண்ணமார் கோவில் வீதியில் நடந்த வாலிபர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய திரு. கே. டானியல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திரு. செ. தம்பிராசா தலைமை தாங்கினர்.

திரு. டானியல் மேலும் பேசுகையில், ''சோமாஸ்கந்தா பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்பும் எமது மாணவர்கள் அங்கு அனுமதிக்கப்படவில்லை. இந்தக் கொடுமையை எதிர்த்து இந்தப் பகுதி மக்கள் கிளர்தெழுந்தால், ஒரே நாளில் இந்தக் காரியத்தைச் சாதித்துவிட முடியும். இதற்காக சகல அரயல் கட்சிகளும் குரலுயர்த்தும் பட்சத்தில் இந்த மக்களே போராட முன்வரவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். மற்றும் திருவாளர்கள் வி. ஏ. கந்தசாமி, க. சூடாமணி, இ. சச்சிதானந்தன் ஆகியோரும் பேசினர்.

வாலிபர் சங்கத்தில் திரு. செ. தம்பிராசா தலைவராகவும், திரு. இ. சச்சிதானந்தம் காரியதரிசியாகவும். திரு. மு. நடராசா தனுதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பிரஜா உரிமை

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பினரா?

ஒப்பந்தத்தின்கீழ் இலங்கைப்பிரஜாவுரிமைக்கு விண்ணப்பங்கள் கோரும் இலங்கை அரசாங்கத்தின் அறிவித்தல்களில் இவ்விபரங்கள் பற்றிக் குறிப்பிடப்படும்.

மேற்கண்ட தகவல்களை எதிர்க்கட்சி அங்கத்தவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவருமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா அண்மையில் பார்லிமெண்டில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றிப் பேசுகையில் வெளியிட்டார்

## பீகிங்கில் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசி ''றிஸீவ்ரை'' எடுத்ததும் பச்சைவசை மாரியேபொழியப்படுகிறது. ரத்தம் கேட்டு பயமுறுத்தல்கள் விடப்படுகின்றன.

மத்திய நகர மைதானத்தில் சோவியத் விரோதக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இது வானெலியிலும் டெலிவிஷனிலும் இடம் பெற்றது. சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி ஒன்றையும், சோவியத் யூனியனையும் எதிர்த்து பிரதமர் சூ-என்-லாயும், வெளிநாட்டு மந்திரி சென்-யீயும், மற்றும் பேச்சாளர்களும் உரை நிகழ்த்தினர்.

## ஐயாறன்

]4-ம் பக்கத் தொடர்ச்சி]

கருத்தையும் அறிந்து பாடும் போதும் கேட்கும் போதும் அதிக பயன் உண்டல்லவா? ஸ்ரீ தியாகராஜ சங்கீத மகிமையையும்பெருமையையும் அப்போதுதான் நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது.

பொலிஸ் பந்தோபஸ்துகளெல்லாம் மிக அதிகம் செய்திருந்தார்கள். மந்திரி ஸி. ஆர். பட்டாபிராமன் வந்ததால்தான் இவ்வளவு விசேஷ காவலாம். பொதுவாக அங்கு அதிகாரிகள் தர்பாரே அதிகமிருப்பதைக் கண்டேன். அங்கு மட்டுமல்ல, கோவில்களிலும் அரசாங்க அதிகாரிகள் வருவதாயிருந்தால் ஏக ஜபர்தஸ்து. சுவாமிக்கு விசேஷ அலங்காரம்! அகாலத்தில் அவர்கள் வந்தாலும் சுவாமி அலங்காரம் செய்து கொண்டு அந்த அதிகாரிகளுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது!

பஞ்சரத்ன கீர்த்தனை நடக்கையில், கிட்டச் சென்று பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆனுல் கூட்டம் அதிகம். முடியவில்லை. மாலை 3 மணிக்குத்தான் கச்சேரிகள் ஆரம்பம். மெம்பராஞல் கிட்ட இருந்து கேட்கலாமென்றும், 5 ரூபாய் செலுத்திஞல் மெம்பர் கார்ட் கிடைக்குமென்றும், அத்துடன் மூன்று நாள் சாப்பாட்டுக்கான ''மெஸ்கார்டும்'' கிடைக்குமென்றும் சொன்னுர்கள். இலங்கையிலிருந்து 'ஈழநாடு' பத்திரிகை சார்பாக வந்துள்ளதாகக் கூறியதும், விசேஷ இடம் கிடைத்தது. நீங்கள் இனி இந்த உற்சவத்துக்குச் செல்வதாயின், ஐந்து ரூபாய் கொடுத்து ஒரு மெம்பராகிவிட்டால் மூன்று நாட்களும் வசதியாகப் பல கச்சேரிகளைக் கேட்பதுடன், சாப்பாட்டுப் பிரச்னையுமில்லை.

சாப்பாட்டைப்பற்றி ஒரு வார்த்தை. கூட்டம் மிக மிக அதிகமாக இருந்தும், முதல் நம்பர் சமையல். அதைப் பாராட்டாதவரில்லை. மற்றப் பொதுமக்களுக்கும் இலவச சாப்பாடு போடப்படுகின்றது. ஒட்டல்களில் அதிகக் கூட்டம். என்ருலும் உணவுகள் தரமாகவே இருந்தன.

திருவையாறு கொசு என்ருல் மிகப் பிரசித்தம், முன்னர் அங்கு யானைக்காலும் அதிகமுண்டு. ஆனுல் இம்முறை கொசு உபத்திரவமுமில்லை. யானைக்காலும் மிகவும் குறைந்துள்ளன. இதற்காகப்பஞ்சாயத்து சுகாதார அதிகாரிகளைப் பாராட்ட வேண்டும். அங்கு வந்து நேரில் கேட்டவர்களைவிட ஆகாசவாணிமூலம் ரேடியோவில் கேட்டு இன்புற்றவர்கள் பலமடங்கு அதிகம். நம் இலங்கையிலிருந்து நள்ளிரவுவரை கேட்ட அன்பர்கள் மிகப் பலராவர். அவர்கள் இன்பம் சொல்ல முடியாது. இவர்களது நன்றியெல்லாம் ஆகாசவாணிக்கு உரியதாகும். வேறு பல ஸ்தலங்களில் நடக்கும் உற்சவங்களையும் இலங்கை யைப் பின்பற்றி அஞ்சல் செய்தால்எவ்வளவு நன்மையாகஇருக்கும்! ஆனுல் 'செசியூலஸ்டேட்' என்ற பெயரில் கோவில்களையெல்லாம் ஆகாசவாணி பகிஷ்காரம் செய்கின்றதே! இந்த அவலநிலை மாற அந்த இறைவன் தான் அருள் செய்ய வேண்டும்.

* * *

செத்தபோதினில் முன்னின்று நம்மைச் சிலர் கூடிச் சிரிப்பதன் முன்னம்,
வைத்த சிந்தையுண்டே மனமுண்டே மதியுண்டே
விதியின் பயனுண்டே, முத்தன் எங்கள் பிரான் என்று
வானேர் தொழநின்ற திமில் ஏறுடையானை, அத்தன் எந்தை பிரான் எம்
பிரானை ஆரூரானை மறக்கலுமாமே.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

* * *

[நாம் செத்தபொழுது சிலர் வந்து கூடி நம்மை இகழ்வதற்கு முன்னே, நமக்கு இறைவன் கொடுத்த கருத்து உளதன்றே! நெஞ்சு உளதன்றே! அறிவு உளதன்றே! நாம் செய்த புண்ணியத்தின் பயனுள்ளதன்றே! அவற்ருல், தேவர்கள், இயல்பாகவே பாசம் இல்லாதவன் என்றும், 'எங்கள் தலைவன்' என்றும் வணங்க நிற்கின்ற முதுகில் திமிலையுடைய எருதையுடையவனும் யாவர்க்கும் தந்தையும், என் தந்தைக்குத் தலைவனும் ஆகிய திருவாரூர் இறைவனை நாம் நினையாது மறத்தலும் இயலுமோ!]

## ''உற்பத்தி . . .

1ம்-பக்கத் தொடர்ச்சி

டுவதாகவும் கூறினர். இவ்விழாவுக்கு வவனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு, பி. மாணிக்கவாசகர் தலைமைவகித்தார்.

வவனியா அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் நமது நாட்டு விவசாயிகளுக்கு எவ்வளவு விரைவில் விவாயப்பொருட்கள் கிடைக்கச் செய்கின்ருேமோ, அவ்வளவு விரைவில் அவர்களும் விவசாயத்தில் ஈடுபடுவார்கள் என்றும் இது தாம் கண்ட அனுபவம் என்றும் இம்மாவட்டத்தை சகலரும் சேர்ந்துஉபஉணவு உற்பத்தியை அதிகரித்து இலங்கையில்உற்பத்திகூடிய முதல் மாவட்டமாக்கவேண்டும் என்றும் கூறினர்.

திரு. சபாரத்தினம், கூட்டுறவு உதவி ஆணையாளர் என். பூரணலிங்கம், காரியாதிகாரி, ஆர். வி. வில்வராசா ஆகியோரும் பேசினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சென்னையிலிருந்து நமதுநிருபர் கா. யோகநாதன் எழுதுவது —

# தமிழ்நாட்டில் இனி யாருடைய ஆட்சி?

# காங்கிரஸா, தி. மு. கவா, கூட்டணியா?

## நாளை வாக்களிப்பு ஆரம்பம்

## 23-ந் திகதி முடிவு தெரியும்

திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா, முஸ்லிம்லீக், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி, தமிழரசுக் கழகம், நாம் தமிழர் கட்சி, போர் வார்ட் புளக் ஆகிய எதிர்க் கட்சிக் கூட்டணிகள் தேர்தலில் வெற்றி பெற்று தமிழ் நாட்டில் கூட்டணி ஆட்சி ஏற்படுமா, அதிக தொகுதிகளில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றியீட்டி தி. மு. க. மந்திரிசபை அமைக்குமா? அல்லது மீண்டும் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்று காமராஜர் தலைமையில் காங்கிரஸ் மந்திரி சபைஏற்படுமா? நாளை புதன்கிழமை தமிழ் நாட்டில் வாக்களிப்புஆரம்பமாகிறது. இம் மாதம் 23-ம் திகதி வாக்குகள் எண்ணப்படும். எந்தக் கட்சி ஆட்சிக்கு வருமென்பதை 23-ம் திகதி வெளியாகும் தேர்தல் முடிவுகளிலிருந்தே ஓரளவு அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

தமிழ் நாட்டில் காலை முதல் நள்ளிரவுக்குப் பின்னரும் நடைபெற்று வந்த நூற்றுக் கணக்கான தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் ஊர்வலங்களும் ஓய்துவிட்டன. இம்மாதம் 15-ம் திகதி தமிழ் நாட்டில் சில தொகுதிகளில் வாக்குப் பதிவுகள் ஆரம்பமாகும். இன்று 13-ம் திகதியுடன் கூட்டங்கள் ஊர்வலங்கள் முற்றுப் பெற்றன. சென்னை நகரில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

## சூடான தேர்தல் செய்திகள்

### இந் நாட்டு மன்னர்கள்

○ மத்திய பிரதேசத்தில் 36 பழைய மன்னர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 22 பேர் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகின்றனர். ஜன சங்க சார்பில் மிகுதிப்பேர் போட்டியிடுகின்றனர். தேர்தலில் நிற்பவர்களில் 2 ராஜா ராணி ஜோடிகளுமுண்டு.

### வீரசிங்கம்

● உத்தர பிரதேசத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஒரு வேட்பாளர், தமது சின்னமாகிய சிங்கத்தைமக்களுக்குஎடுத்துக்காட்ட உண்மையான சிங்கத்தைத் தெருத்தெருவாகக்கொண்டு போய் ஓட்டுக்கேட்கிருர். இவர் பெயர் கிருஷ்ணசிங் சர்மா. இவர் புலஞ்சகர் தொகுதியில் போட்டியிடுகிருர். சிங்கத்தைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகிருர்கள். அவ்விடத்தில் பிரசங்கம் செய்கிருர்.

### கலாட்டாக்கூட்டம்

● ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 79 தேர்தல் கூட்டங்களில் கலாட்டா நடந்தது. பெப்ரவரி மாதத்தில் மட்டும் 24 கூட்டங்களில் கலாட்டா நடந்தது. இதில் 73 கூட்ட்ங்கள் காங்கிரஸாரின் கூட்டங்கள். மற்றும் 6 கூட்டமும் எதிர்க் கட்சியினருடையது. சுயேச்சை வேட்பாளர் ஒருவரின் கூட்டம் கலாட்டாவில் முடிந்தது.

### சூடானதேர்தல்

★ பீகார் மாகாணத்தில் உள்சாயா என்றஇடத்திற்கு அருகே காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரின் கார் தீவைத்துக் கொளுத்தப்பட்டது. வேட்பாளர் சிறியகாயங்களுடன் தப்பினுர்.

### ஜார்ஜ்சங்

● மேற்கு வங்காளத்தில் சவுங்கிரி சட்டசபைத் தொகுதியில் ஜனசங்கவேட்பாளராக பறங்கியர் ஒருவர் போட்டியிடுகின்ருர். இவர் பெயர் ஜார்ஜ் ஆல்பாட்டு.

### கால் மெம்பர்

★ பம்பாயில் டெல்லி சட்டசபை காங்கிரஸ் மெம்பர் பாபுபாய்சின்ஞய காரில் வரும்போது சிலர் வழிமறித்துத் தாக்கிஞர்கள். இதஞல் அவரது இடதுகால் முறிந்தது.

## காங்கிரஸுக்கு எத்தனை இடங்களில் வாய்ப்பு

தமிழ்நாடு, உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம், குஜராத், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டால் காங்கிரஸ் தோல்வியடையலாம் என்று அகில இந்தியக் காங்கிரஸின் பொருளாளர் அதுல்ய கோஷ்மதிப்பிட்டுக் கூறியுள்ளார். கேரளா தவிர மற்றும் மூன்று மாநிலங்களில் காங்கிரஸ் தோற்கும் என்று அவர் கூறினுர்.

பம்பாய், மைசூர், அஸ்ஸாம் மாநிலங்களில் காங்கிரஸுக்கு அதிக லாபம் கிடைக்குமென்றும், ஆந்திரா, பீகார், ஹரியாஞ, ஹிமாலயப் பிரதேச மாநிலங்களில் குறைந்த மெஜாரிட்டியால் காங்கிரஸ் வெற்றிபெறுமென்றும், ஒரிஸா, மத்திய பிரதேசம், ராஜஸ்தானில் காங்கிரஸ் தோல்வியடையுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். காமராஜரின் கோரிக்கைப்படியே அவர் இநத மதிப்பீட்டை வெளியிட்டுள்ளாராம்.

### வறுமையால் தமிழ்மக்கள் மரணம்

சென்னை வண்ணுரப்பேட்டையில் நேற்று வறுமையின் காரணமாக 25 வயதான வடிவாம்பாள் என்ற விதவை, மகள் விஜயாவுக்கு விஷம் கொடுத்துத் தானும் தற்கொலை செய்துகொண்டார். நேற்று எதிர்ப்பு அணியின் கூட்டங்களில் இப்பெண்ணைப் பற்றியும் பேசிஞர்கள். கணவனை இழந்த இப்பெண் தனியாக வசித்து வந்தாரென்றும், சீவிக்கவழியில்லாததால் தற்கொலை செய்தாரென்றும் தெரிவிக்கப்பட்டது. காங்கிரஸை ஆதரித்தால் இனி மேலும் இப்படியான தற்கொலைகள் அதிகரிக்கும் என்று எதிர்ப்பு அணி கூட்டத்தில் கூறினுர்கள்.

## சுவையான தேர்தல் செய்திகள்

◗ மங்களூர் வர்த்தக சபையின் சார்பில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் ஒரே மேடையில், காங்கிரஸ், ஜனசங்கம், வலதுசாரி கம்யூனிஸ்ட்கட்சி, பிரசாசோஷலிஸ்ட், முஸ்லிம் லீக் அபேட்சகர்கள் பேசிஞர்கள். அவர்கள் தங்கள் கட்சித்திட்டங்களை விளக்கிஞர்கள்.

○ பீகார் மாநில தலைநகரமாகிய பாட்ஞவில் காலாட்டா மேலிடுவதையொட்டி ஆயுதங்கள எடுத்துச் செல்லத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது. 3 அடிக்கு மேல் நீளமுள்ள தடியையும் எடுத்துச்செல்ல முடியாது.

○ காஷ்மீரில் 118 அபேட்சகர்களின் வேட்பாளர் மனுக்கள் தேர்தல் அதிகாரியால் தள்ளுபடி செய்யப்பட்டன. இவர்களில் 55 பேர் விஸ்வாசப் பிரமாணம் எடுக்கவில்லை. 28 பேர் கொந்தருத்துக்காரர். மற்றவர்கள் வயது குறைந்தவர்கள்.

○ பீஹார் மாநிலத்தில் தாவுத் நகர சட்டசபைத் தொகுதியில் போட்டியிடும் ஸ்ரீராம் நாராயண் சையைக் என்பவரின் 'ஜீப்' கார் தீ மூட்டிக் கொளுத்தப்பட்டது. வேட்பாளர் காயங்களின்றித் தப்பினுர்.




அதிக வனப்பும்
எழிலும்
லாவண்ணியமும்
பெற
பொன்ட்ஸ்
வனிஷிங் கிறீம்




உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ்-வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.

அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட

பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்

659/67


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கடிதம்

—நமது முல்லைத்தீவு நிருபர் எஸ். பொன்னுசாமி—

தண்ணிரூற்று கண்ணனின் மர்மமரணம் சம்பந்தமாக பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். இம்மரணம் சம்பந்தமாக இப்பொழுது அம்பலவாணர் துரையப்பாவும், அவரது மகனும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட அம்பலவாணர் துரையப்பா, கண்ணனின்தந்தை பொன்னுத்தம்பியுடன் காணிசம்பந்தமாக வழக்காடுபவர் என்று சொல்லப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராஜேஸ்வரன் தலைமையில் இங்குவந்திருக்கும் பொலிஸ் கோஷ்டியினர் தொடர்ந்து விசாரணைகள் நடத்திவருகின்றனர்.

## ரிமாண்ட்

வட்டுவாகல் ஆறுமுகம் என்பவரை கடந்த மாதம் 29-ந் திகதி இரவு கத்தியால் குத்தியதாக பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இறந்தவரின் மகன் ஆறுமுகம் கனகசிங்கம் முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிபதி எதிரியை இம்மாதம் 27-ந் திகதி வரை ரிமாண்டில் வைத்திருக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார்

## அபராதம்

தண்ணீரூற்று ரி. இரசாரத்தினம் என்பவர் சட்ட விரோதமாக உத்தரவின்றி 272 டிரும் கள்ளைக் காரில் கொண்டுசென்றதாகக் குற்றம் சாட்டி முல்லைத்தீவு பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி ரூபா நூறு அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## அப்பீல்

முல்லைத்தீவு மணற்குடியிருப்பு வாசியான சூசைப்பிள்ளை பூபாலசிங்கம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த மாணிக்கம் தம்பையா என்பவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிப் படுகாயம் விளைவித்ததாக முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ஒன்பது மாதம் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

எதிரிசார்பில்ஆஜரானவழக்கறிஞர் திரு. ஐ. டபிள்யூ. ஏ. சாமுவேல் தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல் செய்ய எதிரி விரும்புவதாக மனு ஒன்றைத்தாக்கல்செய்தார். மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி எதிரியை ரூபா இரண்டாயிரம் பிணையில் செல்ல அனுமதித்தார்.

# உறவு குறித்து பேச்சுக்கள்

ஜாகர்த்தா, பெப். 13

சிங்கப்பூருக்கும் - இந்தோனேஷியாவுக்குமிடையே வர்த்தக உறவுகளையும் வங்கி அலுவல்களையும் ஏற்படுத்தும் பொருட்டு இங்கு இரு நாடுகளின் அதிகாரிகளுக்குமிடையே பேச்சுக்கள் ஆரம்பித்தன.

# காலமானார்

லக்னோ, பெப். 13

பிரபல காங்கிரஸ் வாதி திரு. அல்குராய் சாஸ்திரி [63-வயது] நேற்று லக்னோவில் காலமானார்.

# கம்பன் கழக உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை கம்பன்கழகபுது வருட உத்தியோகத்தர்கள் வருமாறு,—

தலைமைக்குழு: பெருந்தலைவர் நீதியரசர் டாக்டர்திரு. ஏச். தம்பையா கியூ. சி. உபதலைவர்கள் திரு, ச. அம்பிகைபாகன், முதலியார் செ. முத்துத்தம்பி, திரு.ம. ஸ்ரீகாந்தா, செயலாளர்: டாக்ரர்சி.சிவஞானசுந்தரம்

## செயற்குழு

தலைவர்- வித்துவான் பொன். முத்துக்குமாரன். துணைத்தலைவர்கள்- திரு. தி. ச. வரதராசன். திரு. க. சிவராமலிங்கம். செயலாளர்- திரு. க. சொக்கலிங்கம். துணைச் செயலாளர்கள்- திரு. ஆ. கல்யாணசுந்தரேசன். திரு. செ. சோமசுந்தரம். இதழாசிரியர்கள்- திரு. அ. சரவணமுத்து. வித்துவான் க. கி. நடராசன். பொருளாளர்- திரு. மு. கணபதிப்பிள்ளை. துணைப் பொருளாளர்- திரு. ஐ. பொன்னம்பலம்.

நான்கு பேர்கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நர்சிங் ஹோமிலிருந்து இந்திரா இல்லம் திரும்பினர்

## மக்களின் உற்சாகமான வரவேற்பு

புதுடில்லி, பெப். 12

புதுடில்லியிலுள்ள வெலிங்டன் நர்சிங் ஹோமில் மூக்கில் சத்திரசிகிச்சை செய்துகொண்ட பாரதப் பிரதமர் திருமதி இந்திரா இன்று நர்சிங் ஹோமிலிருந்து தமது இல்லத்துக்குச் சென்றார்.

அவரைப் பார்ப்பதற்காக நர்சிங்ஹோம் வாசலில் கூடி நின்ற பெருந்திரளான மக்கள்கூட்டத்தினரிடம் தாம் நன்கு தேறிவிட்டதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். அவரை கூடி நின்ற மக்கள் உற்சாகமாக வரவேற்றனர். அப்போது பிரதமர் மிக மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

திருமதி இந்திராவின் உடல்நிலை திருப்திகரமாக இருப்பதாக வைத்தியர்களின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அவரது தலையைச்சுற்றி பாண்டேஜ் கட்டப்பட்டுள்ளது. இன்னும் சில தினங்களுக்கு அவரை இல்லத்தில் ஓய்வெடுத்துக்கொள்ளும்படி டாக்டர்கள் ஆலோசனைகூறியுள்ளார்கள்.

சென்ற புதன்கிழமை புவனேஸ்வரில் தேர்தல் கூட்டமொன்றில் கல்வீச்சினால் திருமதி இந்திராவின் மூக்கெலும்பு முறிந்தது. இதற்காகவே சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

## சுகார்னோ

ஜாகர்த்தா, பெப்.12

இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகார்னோ ஜப்பானில் அடைக்கலம் புகவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது பற்றி தமக்கு ஏதும் தெரியாது என இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி ஆதம்மாலிக் கூறியுள்ளார்.

இப்போதுள்ள நிலையில் அவர் அவ்வாறுசெல்ல முடியாது என்றும் மாலிக் எடுத்துக்கூறியுள்ளார்.

## மீன்பிடிபடகு

கொழும்பு, ஞாயிறு

ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்காக ஜப்பானிலிருந்து மீன்பிடிப்படகுகள் விரைவில் இங்கு வரவிருக்கின்றன. இந்த மீன்பிடிப்படகுகள் நடுக்கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு உபயோகப்படுத்தப்படக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 60 நாட்களுக்கு கடலில் இருக்கக்கூடிய நவீன வசதிகளைக் கொண்டவை இப்படகுகள்.

## தமிழ்நாட்டில் . .

[1ம் பக்கத்தொடர்ச்சி]

சைதாப் பேட்டை, முதல் மந்திரி பக்தவச்சலம் போட்டியிடும் ஸ்ரீ பெரும்புதூர், எதிர்க்கட்சித் தலைவர் போட்டியிடும் திருவல்லிக்கேணி, ஆகிய தொகுதிகளில் தேர்தல் நடைபெறும். இத்தொகுதி முடிவுகளை பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தபடியிருக்கின்றனர்.

15-ம் தேதி நடைபெறவிருக்கும் 79 சட்டசபை தேர்தல்களில், 50 தொகுதிகளில் எதிர்ப்பு அணியினர் வெற்றிபெறுவார்களென்றும், சென்னை நகரத்திலுள்ள 12 சட்டசபை தொகுதிகளில் 10 இடங்களை எதிர்ப்பு அணியினர் கைப்பற்றுவர்களென்றும், தென் சென்னையிலுள்ள 6 தொகுதிகளையும் எதிர்ப்பு அணியினர் கைப்பற்றுவார்களென்றும் இங்கு பேசிக்கொள்ளப்படுகிறது. தென் சென்னையிலுள்ள 6 தொகுதிகளிலும், நெடுஞ்செழியன், கருணாநிதி, மதியழகன், ஆசைத்தம்பி, அரங்கண்ணல், ம. பொ. சிவஞானம் போட்டியிடுகின்றனர். இந்த ஆறு தொகுதிகளையும் உள்ளடக்கிய டெல்லி பாராளுமன்ற தொகுதியில் அண்ணாதுரை போட்டியிடுகிறார். கடந்த தேர்தலில், தென் தென்னையில் தி.மு.க. சார்பில் நாஞ்சில்மனோகரன் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அவர் இம்முறை வட சென்னையில் போட்டியிடுகிறார்.

தியாகராய நகரில் போட்டியிடும் ம. பொ. சிவஞானம் தான் வெற்றிபெறுவது உறுதியென்றும், 20 ஆயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றிபெறுவார் என்றும் கூறியுள்ளார். இவர் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். ஆதலால் அவர் வெற்றி பெறவாய்ப்புண்டு திருவல்லிக்கேணி தொகுதியில் தி. மு. க. தலைவர் நெடுஞ்செழியனுடன் காங்கிரஸ் சார்பில் சம்பந்தப்பா போட்டியிடுகின்றார். நெடுஞ்கசழியன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றியவர்.

## மஞ்சள் அரிசி

நெடுந்தீவு, திங்கள்

இவ்வாரம் நெடுந்தீவில் விநியோகம் செய்யப்பட்ட அரிசி குத்தரிசியாய் இருந்த போதிலும் சேதமுற்ற மஞ்சள் அரிசியாக இருப்பதாக மக்கள் புகார்செய்திருக்கின்றனர். இந்த அரிசி, பாவிக்கமுடியாத நிலையில் மஞ்சளாகவும், உழுத்தும் காணப்படுகிறதாம். பல நாட்களாக இங்கு இருப்பிலிருந்த காரணத்தாலேயே இப்படிச் சேதப்பட்டிருப்பதாக தெரிகிறது.

# பல்கலைக் கழகத்தில் இந்துகலாசார போதனை

## ஒக்டோபரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இந்துக்கலாசாரமும் ஒரு பாடமாகப் போதிக்கப்படவிருக்கிறது.

1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல், பல்கலைக்கழகத்தமிழ்ப் பிரிவில் இந்துக் கலாச்சாரமும் ஒரு பாடமாகப் போதிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதற்கென இரண்டு விரிவுரையாளர்களை நியமிப்பதற்கு பல்கலைக்கழக வரவு - செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்கள் வரையில் தமிழ்ப்பிரிவில் இந்துக்கலாசாரம் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டபின், இந்துக்கலாச்சாரத்துக்கொன தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்துவது பற்றி ஆராயப்படுமென்று அறியப்படுகிறது.

பொதுமராமத்து

# மேற்பார்வைஓவசியருக்கான நேர்முகபரீட்சை வேண்டாம்

## பொதுவேலை மந்திரிக்கு சாவகச்சேரி எம். பி. கடிதம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

''என்ன சாதனைகளை இந்த அரசாங்கம் செய்தாலும் இந்நாட்டிலுள்ள இளைஞர்களின் நம்பிக்கையையும் நல்லெண்



ணத்தையும் பெறுவிட்டால், ஒரு பலனுமில்லை. பொதுச் சேவைக்கு விண்ணப்பிக்கும் இளைஞர்களிடையே, உத்தியோகத் தேர்வில் நேர்மையும், நீதியும் கடைப்பிடிக்கப்படுகிறது என்ற நம்பிக்கையை ஊட்டினாலன்றி, இந்த நல்லெண்ணத்தை இளைஞர்களிடம் நாம் ஏற்படுத்த முடியாது. தகுதியும், திறமையும் வாய்ந்தபல இளைஞர்கள்இருக்கக்கூடியதாகப் பின்கதவால் தகுதியற்றவர்கள் நுழையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றதென ஓர் அபிப்பிராயத்தை அரசாங்கம்இளைஞர்களின் உள்ளத்திலே உண்டாக்கினால், அதுமனக்கசப்பையும், மனச்சலிப்பையும் ஏற்படுத்திவிடும். அதற்கு மாறாக, ஓர் எழுத்துப்பரீட்சைமூலமோ அல்லது ஒருபகுதி எழுத்துப்பரீட்சையும், மறுபகுதி நேர்முகப் பரீட்சையின் மூலமோ உத்தியோகத்தேர்வு நடத்தப்படின், இது மனத்திருப்தியை உண்டாக்கும்.''

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், பொதுமராமத்து இலாகாவில் சூப்பர்வைசிங் ஓவசியர் பதவிகளுக்கான தேர்வு விஷயமாக பொதுவேலை, தபால்மந்திரிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கூறியுள்ளார்.

கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''பொதுமராமத்துஇலாகாவில் மேற்பார்வை ஓவசியர் பதவிகளுக்கு விண்ணப்பித்துள்ள 1200 தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் அனைவருமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக கூறிகிறேன். நேர்முகப்பரீட்சைச்சபையினர் எவ்வளவு தூரம் நீதியாக, நடக்கமுயன்றாலும் தேர்வு செய்யப்படாதவர்கள், சில பெரிய புள்ளிகளின் விருப்பத்துக்குரியவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என எண்ணவும்முற்படுவர் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள். இதற்கு மாறாக. நீங்கள் ஓர் எழுத்துப் பரீட்சையை வைத்தால், எல்லோருக்கும் திருப்தி அளிக்கும்.

மேலும், மேலும் இளைஞர்கள் அரசாங்கத்தை நம்பாமலும், வெறுக்கவும் செய்ய நாங்கள் முற்படக்கூடாது. நேர்முகப்பரீட்சையை கைவிட்டுவிட்டு, ஓர் எழுத்துப்பரீட்சைநடத்தி, அதன் முடிவுகளின் மீது தேர்வு செய்யும்படி உங்கள் உத்தியோகத்தர்களுக்குத் தயவுசெய்து பணிக்கவும்.''




குழந்தையின் சருமத்துக்கு இறகின் மென்மைப் பராமரிப்பு

அருமைக் குழந்தை ஆனந்த [illegible] யாகவோ குதூகலச் சிரிப்புடனோ இருந்தால் தான் அன்புத் தாய்க்கு பரம திருப்தி. குழந்தையின் மேனி மென்மையும் மிருதுவுமானது. சற்றே அசௌகரியம் என்றாலும் குழந்தை தவித்துப் போகும். அதனால் தான் இக்காலத் தாய்மார் குழந்தைகளைக் குளுமையாகவும், சொகுசாகவும் பேண, பெயர்ஸ் பேபி சோப்பும் பவுடரும் உபயோகிக்கிறார்கள்.

தூய, மிருதுவான பெயர்ஸ் பேபி சோப்பில் மட்டுமுள்ள லனோலின்.

குழந்தையின் மெத்தென்ற மேனி [illegible] சருமச் [illegible]. வெப்பத்தை உறிஞ்சும் மென்மையான பெயர்ஸ் பவுடர், அரிய டால்க் பவுடரில் தயாரானது.. அழற்சியை நீக்கி, குழந்தை நாள் முழுதும் குளுமையும் சொகுசும் கொள்ளச் செய்வது.

உங்கள் குழந்தையை உன்னதமாகப் பராமரியுங்கள்.... பெயர்ஸ் பேபி சோப்பும் பவுடரும் வழங்கும் இறகின் மென்மைப் பராமரிப்பு.

பெயர்ஸ் பேபி சோப்பும் பவுடரும்




லனோலின் சேர்க்கப்பட்டது

சோப் -/75
பவுடர்- 1/55

தயாரிப்பாளர்கள்:
லீவர் பிரதர்ஸ் ([illegible]) லிமிட்டெட்

CPBSP.3X54


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org